2004 பிப்ரவரி 10]

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அடுத்த நிதியாண்டிலாவது களம்பூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மாவை வணங்கி, வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பால் தேவைப்படும். ஆனால், களம்பூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் நாளொன்றுக்கு உள்ளூர் தேவை போக, மீதி 3,150 லிட்டர் பால் மட்டுமே ஒன்றியத்திற்கு அனுப்புகிறது. ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க ரூபாய் 3 கோடி தேவைப்படும். மேலும் களம்பூர் பகுதியில் ஒன்றியத்திற்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லை. களம்பூர் பேரூராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட்டாலும், போதுமான பால் கிடைக்காது. எனவே, களம்பூர் பேரூராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் வாய்ப்பு இல்லை. இருந்தபோதிலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று, பால் உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, தற்போது செயல்பட்டு வரும் களம்பூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டும் இயந்திரம் "Bulk Cooler" விரைவில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 23, திரு. கோவை தங்கம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

23—

நெசவாளர்களுக்குக் கடன்

***22840—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவுத் தொழிலை மேலும் ஊக்குவிக்க வட்டியில்லாக் கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2004 பிப்ரவரி 10

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நெசவுத் தொழிலை ஊக்குவிக்க அரசு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நபார்டு வங்கி மூலம் சலுகை வட்டியில் மூலதனக் கடன் வழங்கி வருவதால், வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதியின் கீழ்ப்பகுதியிலுள்ள இரமணிமுதலிபுதூர், சும்பாளப்பட்டி, தெங்கம்பாளையம், அரசூர், சித்தூர் போன்ற கிராமங்களிலுள்ள நெசவாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களை சமீபத்திலே சந்தித்துக் கேட்கின்றபோது, நெசவாளர்களுடைய குடும்பம் மிகவும் கஷ்டத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். பட்டினியால் வாடிக் கொண்டிருக்கின்றார்கள். குழந்தைகளைப் படிக்க வைக்க வசதியில்லாமல், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வயதுவந்த பெண்களைக்கூட, திருமணம் செய்து வைக்க முடியாமல், மீட்டர் வட்டிக்குக் கடனை வாங்கி, கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். கடுமையான உழைப்பாளிகளாகிய நெசவாளர்கள் நாள்தோறும் இரத்தக் கண்ணீரை வடித்துக் கொண்டிருக்கின்றார்கள். முன்னாள் பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் காலத்தில் அறிவித்ததைபோல, 36 இன்ச் அகலத்திற்கு மேல் விசைத்தறிகள் வைத்திருப்பவர்கள், புதிய இரகடிசைன்களை தயார் செய்து வைத்து, விற்பனை செய்யக்கூடாது என்று தடை செய்வதைப் போல, இந்த அரசும் தடை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 40 இன்ச், 48 இன்ச், 55 இன்ச் போன்ற அகலம் உள்ள துணிகளை விசைத்தறி தயாரிப்பாளர்கள் தயார் செய்து சந்தையில் விற்பதின் மூலம் நெசவாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் சந்தையிலே போட்டிபோட்டு, விற்பனை செய்ய முடியவில்லை. கைத்தறிக்குத் தேவையான மூலப் பொருட்கள், சில்க் நூல், காட்டன் நூல், ஜரிகை போன்றவைகளின் விலை அடிக்கடி உயர்கிறது. ஆனாலும் தயாரிக்கப்பட்ட கைத்தறித் துணிகளுக்கு (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம். பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். கைத்தறித் துணிகளுக்கு விலை உயர்வு கிடைப்பதில்லை.

2004 பிப்ரவரி 10]

ஆகையால் இதற்கு அரசு மானியம் வழங்க முன்வர வேண்டும். நெசவாளர்கள் குடும்பங்களின் கஷ்டத்தைப் போக்க...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம், கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கோவை தங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். பேசி முடித்துவிடுகிறேன். நெசவாளர்கள் குடும்பங்களின் கஷ்டத்தைப் போக்க, அவர்களுடைய கைத்தறித் துணியை அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்கள் கைத்தறி கொள்முதலுக்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, இது மானியக் கோரிக்கை மீதான விவாதமல்ல.(குறுக்கீடு) மானியக் கோரிக்கை மீதான விவாதமல்ல.

திரு. கோவை தங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

திரு. கோவை தங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை மீதான விவாதமல்ல.

திரு. கோவை தங்கம்: கைத்தறி நெசவாளர்களின் குடும்பப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு நீண்டகாலக் கடன் உதவி வழங்குவதற்கு அரசு முன் வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக் கூடிய நெசவாளர்கள் எல்லாம், இப்போது கஷ்ட நிலையில் இருந்து மாறி, புது தெம்புடன் இருக்கின்றார்கள். இதற்குக் காரணம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நெசவாளர்களுடைய துயர் துடைப்பதற்காக நல்ல பல

திட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இந்த நெசவாளர்களுக்கு நபார்டு வங்கியின் மூலம் கொடுக்கக்கூடிய கடன்களுக்கு வட்டி சதவீதத்தைக்கூட வெகுவாகக் குறைத்து இப்பொழுது அம்மா அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், நெசவாளர்களுக்கு வட்டி வீதத்தை இன்னும் குறைக்க வேண்டும் என்று சொல்லி நபார்டு வங்கியினுடைய அதிகாரிகளிடம், இப்பொழுது எங்களது துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், நாங்களும் பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் தலைமையிலே கமிட்டி ஒன்று போடப்பட்டிருக்கிறது. இந்த கமிட்டியின் மூலமாக பல்வேறு நெசவாளர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, இன்றைக்கு நல்ல முறையில் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. ஆனால், கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு வங்கிகளிலே கடன் கிடைப்பதில் மிகவும் சிரமமாக இருக்கிறது. கூட்டுறவு வங்கிகள், வங்கிகள் மூலமாக கைத்தறி நெசவாளர்கள் கடன் பெற முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு தலையிட்டு, நெசவாளர் குடும்பங்களுக்கு உடனடியாக கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மத்திய கூட்டுறவு வங்கி அனைத்து நெசவாளர் சங்கங்களுக்கும் காசுக் கடன் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் எந்தெந்தக் கூட்டுறவு சங்கங்களுக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னால் அது உடனடியாக நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 24, திரு. ஜெக. வீரபாண்டியன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.